**<u>சுருக்கம்</u>**

திட்டங்கள் – மாநிலத் திட்டம் – ''கலைஞர் வீடு வழங்கும் திட்டம்'' – 2010–16 – கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின்கீழ் கட்டப்படவுள்ள வீடுகளுக்கு வீட்டின் மாதிரி வடிவமைப்பு (model type design) மற்றும் சின்னம் / இலட்சினை (logo) – அறிவிப்பு செய்து ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மாஅதி1) துறை

அரசாணை (நிலை) எண். 85 நாள்: 12.08.2010

படிக்கப்பட்டவை:

1) அரசாணை (நிலை) எண்.68, ஊ.வ (ம) ஊ. துறை, நாள் 14.06.2010.

2) அரசாணை (நிலை) எண்.74, ஊ.வ. (ம) ஊ. துறை, நாள் 16.07.2010.

3) அரசாணை (நிலை) எண்.81, ஊ.வ. (ம) ஊ. துறை, நாள் 5.8.2010.

4) இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அவர்களின் கடித எண்.16263/2010/ KVVT, நாள் 09.08.2010.

*****

**<u>ஆணை:</u>**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ''கலைஞர் வீடு வழங்கும் திட்டம்'' எனும் ஒரு புதிய திட்டத்தை செயல்படுத்தவும், அதற்கான வழிகாட்டு நெறிமுறைகளையும் வகுத்து ஆணைகள் வெளியிடப்பட்டன. இத்திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் ஏனையவற்றிற்கிடையே கலைஞர் வீடு வழங்கும் திட்ட வீடுகளுக்கென தனி மாதிரி வடிவமைப்பு தயாரிக்கப்படும் எனவும், ஒவ்வொரு வீட்டின் முகப்பிலும், இத்திட்டத்திற்கான சின்னம் மற்றும் பயனாளியின் பெயர் வண்ணம் தீட்டப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

2. மேலே நான்கில் படிக்கப்பட்ட கடிதத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின்கீழ் கட்டப்படவுள்ள வீடுகளுக்கு மாதிரி வடிவமைப்பு மற்றும் சின்னம் அனுப்பி அரசின் ஒப்புதல் கோரியுள்ளார். மேலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின்கீழ் கட்டப்படவுள்ள வீடுகளுக்கு மாதிரி மதிப்பீடு தன்னால் தனியே வெளியிடப்படும் எனவும், பயனாளிகளே தங்கள் வீடுகளை கட்டிக் கொள்வதால், மனையின் அமைப்புக்கும், அளவிற்கும் ஏற்றவாறு மாதிரி வடிவமைப்பிலிருந்து தேவையான சிறு மாற்றங்களைச் செய்து கட்டிக் கொள்ளலாம் என்றும் தெரிவித்து, அதன்மீதும் அரசின் ஆணை கோரியுள்ளார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு நன்கு ஆய்வு செய்து, அதனை ஏற்றுக் கொள்ளலாம் என்று முடிவு செய்து, பின்வருமாறு ஆணையிடுகிறது.

(i) ''கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின்'' கீழ் கட்டப்படவுள்ள வீடுகள் இவ்வாணையின் இணைப்பு – I - மற்றும் II-ல் காணப்படும் மாதிரி வடிவமைப்பைப் (model type design) போல் கட்டப்பட வேண்டும்.

(ii) ''கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின்'' கீழ் கட்டப்படவுள்ள ஒவ்வொரு வீட்டின் முகப்பில் இணைப்பு– III-ல் காணப்படும் இலட்சினை / சின்னம் (logo) வண்ணம் தீட்டப்பட வேண்டும்.

(iii) ''கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின்'' கீழ் கட்டப்படும் வீட்டிற்கான மாதிரி மதிப்பீடு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரால் தனியே வெளியிடப்படும்.

(iv) ''கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின்'' கீழ் பயனாளிகள் தங்கள் வீடுகளை தாங்களாகவோ அல்லது தங்களின் முகவர்கள் மூலமாகவோ கட்டப்படவுள்ளதால், காலி மனையின் அமைப்புக்கும், அளவிற்கும் ஏற்றவாறு மாதிரி வடிவமைப்பில் (model type design) தேவைக்கேற்ப சிறு மாற்றங்களைச் செய்து வீடுகளைக் கட்டிக் கொள்ளலாம்.

(ஆளுநரின் ஆணைப்படி)

காள. அலாவுதீன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை -15.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளின் திட்ட இயக்குநர்கள்
அனைத்து மாவட்ட ஊராட்சிகள்
அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள்
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் மூலமாக)
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை – 35.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பரா.1) துறை, சென்னை–9

**நகல்**

மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், சென்னை – 9.
மாண்புமிகு நிதியமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர்,
சென்னை – 9.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9.
நிதி (ஊவ) துறை, சென்னை – 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்